# VIJAYAKUMAR IAS ACADEMY

VIJAYKUMAR IAS ACADEMY — INSTITUTE FOR YOUR SUCCESS

**INSTITUTE FOR YOUR SUCCESS**

DISCIPLINE
KNOWLEDGE
SUCCESS

YOUR GOALS
OUR MISSION
ALWAYS

*Stay Informed
Stay Ahead*

**NATIONAL UPDATES**
தேதிய செய்திகள்

**INTERNATIONAL NEWS**
சர்வதேச செய்திகள்

# OCTOBER 26 2026

# CURRENT AFFAIRS

**GOVERNMENT POLICIES**
அரச கொள்கைகள்

**DEFENCE & SECURITY**
பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு

**ECONOMY & BUSINESS**
பொருளாதாரம் மற்றும் வணிகம்

**SCIENCE & TECHNOLOGY**
அறிவியல் மற்றும் தொதில்துட்பம்

*Current Affairs for a Brighter Tomorrow*

# ADMISSION OPEN

**TNPSC GROUP 1, 2, 2A EXAM 2027**

உங்கள் வெற்றிக்கான முதல் படி!

GROUP 1, 2 PRELIMS BATCH 2027 STARTS ON **OCTOBER 19**

**STAY UPDATED • STAY AHEAD • ACHIEVE SUCCESS**

16/148, FIRST FLOOR, AVVAI STREET,
THIRUVALEESWARAR NAGAR,
THIRUMANGALAM, ANNA NAGAR WEST,
CHENNAI – 600 040.

STUDENT COUNSELLOR :
9360533992 | 7708473992
BOOK PURCHASE : 9384703992

www.vijaykumariasacademy.com

## MANIFESTATION:




**குறள் எண்: 136; அதிகாரம்: ஒழுக்கம் உடைமை**

**திருக்குறள்:**

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

**பொருள்:**

ஒழுக்கம் தவறுதலால் குற்றம் (மற்றும் இழிவு) உண்டாவதை நன்கு உணர்ந்துள்ள மனவலிமை உடைய சான்றோர், நல்லொழுக்கத்தில் எப்போதுமே தவற மாட்டார்கள்.



# VIJAYAKUMAR IAS ACADEMY

## நடப்பு நிகழ்வுகள்

## DAILY CURRENT EVENTS

## 26 அக்டோபர் 2026

## (தினமணி – THE HINDU- PIB)

INDEX


| S.NO | TOPICS | PAGE NO. |
|---|---|---|
| | **UNIT-II GEOGRAPHY OF INDIA – அலகு -II இந்தியாவின் புவியியல்** | |
| 1. | **Facts About Cyclone Arnab** - புயல் அர்னாப் | 03 |
| | **UNIT-IV POLITY – அலகு -IV இந்திய ஆட்சியியல்** | |
| 1. | **Article – 261 to 265 - சரத்து 261 - 265** | 03 |
| | **UNIT-V INDIAN ECONOMY AND DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU – அலகு -V இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்.** | |
| 1. | **Rs. 84,084 Crore 'Samudra Manthan' Scheme Launched** - ரூ.84,084 கோடி 'சமுத்திர மந்தன்' திட்டம் | 04 |
| 2. | **'College Campus Tour' Scheme for Government School Students** - அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 'கல்லூரி களப் பயணம்' திட்டம் | 05 |
| | **UNIT-VI HISTORY, CULTURE, HERITAGE, AND SOCIO-POLITICAL MOVEMENTS IN TAMIL NADU - அலகு -VI தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்** | |
| 1. | **Vice President C. P. Radhakrishnan Pays Tribute to Maruthu Pandiyar Brothers** - மருது சகோதரர்களுக்குக் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அஞ்சலி | 06 |
| | **MISCELLANEOUS CURRENT AFFAIRS – இதர நடப்பு நிகழ்வுகள்** | |
| 1. | **Prestigious International Award for Indian Physicist** - இந்திய இயற்பியலாளருக்கு உயரிய சர்வதேச விருது | 08 |
| 2. | **Rs. 1.25 Crore Incentive for Tamil Nadu Badminton Player Thulasimathi Murugesan** - தமிழக பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு ரூ.1.25 கோடி ஊக்கத்தொகை | 09 |
| 3. | **Famous Chef Damodharan ('Chef Damu') Passes Away at 72** - பிரபல சமையல் கலைஞர் 'செஃப்' தாமு (72) காலமானார் | 10 |

## UNIT-II GEOGRAPHY OF INDIA – அலகு -II இந்தியாவின் புவியியல்



In Bengali, Arnab means ocean. Bangladesh gave the storm this name. It is one of thirteen countries that take turns naming storms from a shared list. There's something fitting about a storm from the sea carrying the sea's own name to land.

### 1) Facts About Cyclone Arnab

- The name **Arnab** for the cyclone was provided by **Bangladesh**.
- In Bengali, **Arnab** means **"ocean"**.
- The name belongs to a **pre-approved rotating list** managed by the **World Meteorological Organization (WMO)** for the **North Indian Ocean region**.

**Source: India Today**

### 1) புயல் அர்னாப்:

- **அர்னாப்** என்ற பெயர் **வங்காளதேசத்தால்** வழங்கப்பட்டது.
- வங்காள மொழியில் அர்னாப் என்றால் **"பெருங்கடல்"** (ocean) என்று பொருள்.
- இப்பெயர் **உலக வானிலை அமைப்பு (WMO)** பராமரிக்கும் **முன் அனுமதியளிக்கப்பட்ட சுழற்சிப் பட்டியலில்** இடம்பெற்றுள்ளது.

**Source: India Today**

## UNIT-IV POLITY – அலகு -IV இந்திய ஆட்சியியல்

### 1) Article – 261 to 265

- **Article 261**: **Public acts, records and judicial proceedings**.
- **Article 262**: **Adjudication of disputes** relating to waters of **inter-State rivers or river valleys** under disputes relating to waters.
- **Article 263**: **Provisions with respect to an inter-State Council** under co-ordination between States.
- **Article 264**: **Interpretation**.
- **Article 265**: **Taxes not to be imposed save by authority of law**.

**Source: Laxmikanth Polity**

### 1) சரத்து 261 - 265

- **சரத்து 261**: **பொதுச் செயல்கள், பதிவுகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள்**.
- **சரத்து 262**: **இடைநில மாநில நதிகள் அல்லது நதிப் பள்ளத்தாக்குகள்** நீர்கள் தொடர்பான தகராறுகளைத் தீர்ப்பது.
- **சரத்து 263**: **மாநிலங்களுக்கு இடையேயான குழு**.
- **சரத்து 264**: **விளக்கம்**.
- **சரத்து 265**: **சட்டத்தின் அதிகாரமின்றி வரிகள் விதிக்கப்படக்கூடாது**.

**Source: Laxmikanth Polity**

## UNIT-V INDIAN ECONOMY AND DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU – அலகு -V இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்.

**ரூ.84,084 கோடி 'சமுத்ர மந்தன்' திட்டம்: கடலுக்கு அடியில் எண்ணெய், எரிவாயு தேட வழிகாட்டுதல்கள் வெளியீடு**

புது தில்லி, அக்.23: ரூ.84,084 கோடி செலவில் சமுத்ர மந்தன் திட்டத்தின் கீழ், கடலுக்கு அடியில் எண்ணெய் மற்றும் எரிவாயு தேடும் பணிகளை மேற்கொள்ள, மத்திய அரசு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலையில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், கடலுக்கு அடியில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களைத் தேடும் சமுத்ர மந்தன் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்துடன் இந்தத் திட்டத்தை 2030-31-ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்த ரூ.84,084 கோடி நிதி ஒதுக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இது இந்தியாவின் மிகப் பெரிய கடல்சார் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுத் திட்டமாகும்.

### 1) Rs. 84,084 Crore 'Samudra Manthan' Scheme Launched

- The central government has released guidelines to search for **oil and natural gas deep under the sea** at a cost of **Rs. 84,084 crore**.
- Approved by the Union Cabinet chaired by **Prime Minister Modi** in July, this is **India's largest offshore oil and natural gas exploration project**.
- The project will be implemented through the **2030–31 financial year**.
- It is expected to add oil and gas energy equivalent to **more than 60 crore tonnes** to India's reserves.
- The central government will provide financial assistance for drilling **56 exploratory wells** in deep and ultra-deep waters, and **4 geological wells**.
- Regions with water depths above **400 meters** are classified as deepwater, and above **1,500 meters** as ultra-deepwater.

**Source: Dinamani, PIB**

### 1) ரூ.84,084 கோடி 'சமுத்திர மந்தன்' திட்டம்

- கடலுக்கு அடியில் **எண்ணெய் மற்றும் எரிவாயு தேட** ரூ.84,084 கோடி செலவில் **சமுத்திர மந்தன் திட்டம்** தொடங்கப்பட்டுள்ளது.
- கடந்த ஜூலையில் பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையில் ஒப்புதல் பெற்ற இது, **இந்தியாவின் மிகப்பெரிய கடல்சார் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுத் திட்டமாகும்**.
- இத்திட்டம் **2030-31-ஆம் நிதி ஆண்டு வரை** செயல்படுத்தப்படும்.
- இதன் மூலம் **60 கோடி டன்னுக்கும் அதிகமான எரிசக்திக்கு இணையாக** எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பை சேர்க்க முடியும்.
- ஆழ்கடல் மற்றும் மிகுந்த ஆழ்கடல் பகுதிகளில் **56 கிணறுகளுக்கும்**, புவியியல் ஆய்வுக்காக **4 கிணறுகளுக்கும்** மத்திய அரசு நிதியுதவி அளிக்கும்.
- கடல் ஆழம் **400 மீட்டருக்கு மேல்** உள்ள பகுதிகள் ஆழ்கடலாகவும், **1,500 மீட்டருக்கு மேல்** உள்ள பகுதிகள் மிகுந்த ஆழ்கடலாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**Source: Dinamani, PIB**

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 'கல்லூரி களப் பயணம்' திட்டம்

## அமைச்சர் ராஜ்மோகன் தொடங்கி வைத்தார்

**சென்னை, அக். 23:** அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நிகழ் கல்வியாண்டுக்கான 'கல்லூரிக் களப் பயணம்' திட்டத்தை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் சென்னையில் தொடங்கி வைத்தார்.

அரசுப் பள்ளி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வியைத் தொடர வேண்டும் என்ற தமிழக அரசின் இலக்கை முன்னெடுக்கும் வகையில் 'கல்லூரிக் களப் பயணம் 2026-2027' திட்டத்தின் மாநில அளவிலான தொடக்க விழா சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு அமைச்சர் ராஜ்மோகன் தலைமை வகித்து திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.



பள்ளிக் கல்வித் துறை சார்பில், அரசுப் பள்ளி மாணவ- மாணவிகளுக்கான 'கல்லூரிக் களப் பயணம்' பேருந்தை சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் வெள்ளிக்கிழமை கொடியசைத்து தொடங்கி வைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன். உடன், துறைச் செயலர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உள்ளிட்டோர்.

உயர்கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கல்லூரிச் சூழலை நேரடியாக அறிமுகப்படுத்துதல், மாணவர்களின் ஆர்வம் மற்றும் திறனுக்கு ஏற்ற உயர்கல்விப் பாதையைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நிகழ் கல்வியாண்டில் தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் உள்ள அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சிறப்புக் கவனம் தேவைப்படும் 1,47,631 மாணவர்கள் உயர்கல்வித் துறையின் ஒத்துழைப்புடன் 741 அரசு மற்றும் அரசுக் கல்லூரிகளுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

**அமைச்சர் ராஜ்மோகன் பேசியதாவது:** பிளஸ் 2, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களின் வீடுகள் பதற்றம் நிறைந்ததாக உள்ளன.

அந்த மாணவர்களை சிறிது நேரம்கூட தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பார்க்க பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள். வீட்டுக்கு வரும் உறவினர்களும்கூட மாணவர்களிடம் பொதுத் தேர்வு குறித்து அச்சுறுத்திச் செல்வர். பொதுத் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களிடம் இதுபோன்று நடந்து கொள்ளக் கூடாது.

நான் பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற பின்னர், அடுத்து என்ன படிக்கலாம் என்று தவித்தபோது, போதுமான விழிப்புணர்வு இல்லை. வழிகாட்டுதலும் கிடைக்கவில்லை. எனது தந்தை பிஏ தமிழ், விஷுவல் கம்யூனிகேஷன் என பல்வேறு படிப்புகள் குறித்த தகவல்களைத் தெரிவித்தார்.

அதேவேளை, தப்பித் தவறிக்கூட பொறியியல் படிப்பில் மட்டும் சேர்ந்துவிடாதே என அறிவுறுத்தினார். என்னைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்களே என நான் பொறியியல் படித்தேன்.

தன்னம்பிக்கை இருந்தால்போதும், வாழ்க்கையில நாம் வெற்றி பெறலாம். கனவுகளுக்கு சிறிது உழைப்பையும், ஈடுபாட்டையும், தன்னம்பிக்கையையும் சேர்த்து கொடுத்தால் வெற்றிபெற முடியும். நம்மிடம் உள்ள திறன்களை வைத்து முன்னேற வேண்டும் என்றார்.

நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறைச் செயலர் இன்னசென்ட் திவ்யா, அரசு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் வெ.குமரேசன் மற்றும் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## 2) 'College Campus Tour' Scheme for Government School Students

- School Education Minister **Rajamojan** launched the **'College Campus Tour 2026-2027'** scheme in Chennai to help government school students pursue higher education.
- The state-level inauguration was held at the **Anna University campus** in Chennai.
- The scheme aims to **create awareness about higher education**, provide direct exposure to college environments, and guide students based on their interests and skills.
- Under this scheme, **1,47,631 students** requiring special attention from government schools across **38 districts** will be taken to visit **741 government and private colleges** with the cooperation of the Higher Education Department.

**Source: Dinamani**

## 2) அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 'கல்லூரி களப் பயணம்' திட்டம்

- அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர ஏதுவாக **'கல்லூரி களப் பயணம் 2026-2027'** திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **ராஜமோகன்** சென்னையில் தொடங்கி வைத்தார்.
- இதற்கான மாநில அளவிலான தொடக்க விழா சென்னை **அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில்** நடைபெற்றது.
- **உயர் கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**, கல்லூரிச் சூழலை நேரடியாக அறிமுகப்படுத்துவது மற்றும் மாணவர்களின் ஆர்வம் மற்றும் திறனுக்கு ஏற்ற உயர்கல்விப் பாதையைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் **38 மாவட்டங்களிலும்** உள்ள **1,47,631 அரசுப் பள்ளி மாணவர்கள் 741 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு** அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

**Source: Dinamani**

**UNIT-VI HISTORY, CULTURE, HERITAGE, AND SOCIO-POLITICAL MOVEMENTS IN TAMIL NADU - அலகு -VI தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்**

## மருது சகோதரர்கள் நினைவு நாள்: குடியரசு துணைத் தலைவர் அஞ்சலி



மருது சகோதரர்களின் நினைவுநாளையொட்டி தில்லியில் உள்ள குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் அவர்களின் உருவப் படங்களுக்கு சனிக்கிழமை மலரஞ்சலி செலுத்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன்.

### 1) Vice President C. P. Radhakrishnan Pays Tribute to Maruthu Pandiyar Brothers

- Vice President **C. P. Radhakrishnan** paid floral tributes to the portraits of the **Maruthu Pandiyar brothers** on Saturday at the Vice President's Enclave in New Delhi on their death anniversary.
- **Anniversary Date**: The execution / death anniversary of the Maruthu Pandiyar brothers is observed on **October 24** (they were executed by the British East India Company at Tirupputhur Fort on October 24, 1801).
- **Historical Significance**: The Maruthu Pandiyar brothers (Periya Maruthu and Chinna Maruthu) were early freedom fighters and rulers of the **Sivaganga kingdom** who led the **South Indian Rebellion of 1801** against British colonial rule.

**Source: Dinamani**

### 1) மருது சகோதரர்களுக்குக் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அஞ்சலி

- மருது சகோதரர்களின் நினைவுநாளையொட்டி, டெல்லியில் உள்ள குடியரசுத் துணைத் தலைவர் மாளிகையில் அவர்களது உருவப்படங்களுக்குக் குடியரசுத் துணைத் தலைவர் **சி.பி. ராதாகிருஷ்ணன்** சனிக்கிழமை மலரஞ்சலி செலுத்தினார்.
- **நினைவு நாள் (தேதி)**: மருது சகோதரர்களின் நினைவு நாள் **அக்டோபர் 24** ஆகும் (1801 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று திருப்பத்தூர் கோட்டையில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர்).
- **கூடுதல் வரலாற்றுத் தகவல்**: மருது சகோதரர்கள் (பெரிய மருது மற்றும் சின்ன மருது) **சிவங்கைச் சீமையின்** ஆட்சியாளர்களாக இருந்து ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக **1801-ல் தென்னிந்தியப் புரட்சியைத்** தலைமைதாங்கி நடத்தினர்.

**Source: Dinamani**

**MISCELLANEOUS CURRENT AFFAIRS – இதர நடப்பு நிகழ்வுகள்**

# இந்திய இயற்பியலாளருக்கு உயரிய சர்வதேச விருது

புது தில்லி/பெங்களூரு, அக். 24: சர்வதேச அளவில் இயற்பியல் துறைக்கான உயரிய விருதுகளில் ஒன்றான 'ஆஸ்கர் கிளைன் பதக்கம்', நடப்பாண்டு இந்திய இயற்பியலாளர் அசோக் சென்னுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உயரிய விருதைப் பெற்ற முதல் இந்திய இயற்பியலாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்வீடனைச் சேர்ந்த புகழ்பெற்ற கோட்பாட்டு இயற்பியலாளர் ஆஸ்கர் கிளைன் நினைவாக கடந்த 1988-இல் நிறுவப்பட்ட 'ஆஸ்கர் கிளைன் பதக்கம்', ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம் மற்றும் ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாதெமியின் நோபல் குழுவால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

இதையொட்டி, இயற்பியல் துறையில் தலைசிறந்த பங்களிப்பை நல்கும் விஞ்ஞானியைத் தேர்வு செய்து, ஆஸ்கர் கிளைன் நினைவு விரிவுரை நிகழ்த்தவும், விருதைப் பெற்றுக் கொள்ளவும் அழைப்பு விடுக்கப்படும்.

நடப்பாண்டு ஆஸ்கர் கிளைன் பதக்கத்துக்கு இந்திய இயற்பியலாளர் அசோக் சென் தேர்வு செய்யப்பட்டு, ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் உள்ள ஆல்பா நோவா பல்கலைக்கழக மையத்தில் கடந்த அக்.22-ஆம் தேதி விரிவுரை நிகழ்த்தினார். அத்துடன், ஆஸ்கர் கிளைன் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

கர்நாடக மாநிலம், பெங்களூரில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின் (டிஐஎஃப்ஆர்) கோட்பாட்டு அறிவியலுக்கான சர்வதேச மையத்தின் (ஐசிடிஎஸ்) கௌரவ பேராசிரியரான அசோக் சென், பிரபஞ்சத்தின் மிக அடிப்படையான கட்டமைப்பு தொகுப்புகளாகச் செயல்படும் நுண்ணிய ஆற்றல் இழைகள் குறித்த நவீன கோட்பாட்டின் (மாடர்ன் ஸ்டிரிங் தியரி) 'சிற்பி' என்ற பெருமையைப் பெற்றவர். நுண்ணிய ஆற்றல் இழைகள் மற்றும் கருந்துளை சார்ந்த இவரது ஆய்வுப் பணிகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அசோக் சென்னின் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில், மத்திய அரசு சார்பில் கடந்த 2001-இல் பத்மஸ்ரீ விருதும், கடந்த 2013-இல் பத்ம பூஷண் விருதும் வழங்கப்பட்டது.

இயற்பியல் துறையில் வழங்கப்படும் மற்றொரு சர்வதேச உயரிய விருதான 'அடிப்படை இயற்பியல் திருப்புமுனைப் பரிசை' கடந்த 2012-இல் இவர் பெற்றார். தற்போது ஆஸ்கர் கிளைன் பதக்கத்தை வென்றுள்ள அசோக் சென்னுக்கு பெங்களூரு ஐசிடிஎஸ் இயக்குநர் ராஜேஷ் கோபகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## 1) Prestigious International Award for Indian Physicist

- Indian physicist **Ashoke Sen** has been awarded the prestigious **Oskar Klein Medal**, becoming the **first Indian physicist** to receive this honor.
- Established in **1988** in memory of Swedish theoretical physicist Oskar Klein, the medal is awarded annually by **Stockholm University** and the **Nobel Committee of the Royal Swedish Academy of Sciences**.
- Professor Ashoke Sen delivered the **Oskar Klein Memorial Lecture** on **October 22** at the AlbaNova University Center in Stockholm, Sweden, where he received the medal.
- He is an honorary professor at the **International Centre for Theoretical Sciences (ICTS)** of TIFR in Bengaluru, renowned for being a sculptor of modern **String Theory** and research on **black holes**.
- He previously received the **Padma Shri in 2001**, the **Fundamental Physics Breakthrough Prize in 2012**, and the **Padma Bhushan in 2013**.

**Source: Dinamani**

## 1) இந்திய இயற்பியலாளருக்கு உயரிய சர்வதேச விருது

- இந்திய இயற்பியலாளர் **அசோக் சென்** என்பவருக்கு உயரிய **'ஆஸ்கர் கிளைன் பதக்கம்'** வழங்கப்பட்டுள்ளது; இவ்விருதைப் பெறும் **முதல் இந்திய இயற்பியலாளர்** இவராவார்.
- சுவீடனின் கோட்பாட்டு இயற்பியலாளர் ஆஸ்கர் கிளைன் நினைவாக **1988-இல்** நிறுவப்பட்ட இப்பதக்கம், **ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம்** மற்றும் **ராயல் சுவீடிஷ் அறிவியல் அகாதெமியின் நோபல் குழுவால்** ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- சுவீடனின் ஸ்டாக்ஹோமில் உள்ள ஆல்பாநோவா பல்கலைக்கழக மையத்தில் **அக்டோபர் 22-ஆம் தேதி** சொற்பொழிவு ஆற்றிய பின் அவர் இப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.
- பெங்களூரு ஐசிடிஎஸ் (ICTS) கௌரவ பேராசிரியரான இவர், நவீன **சரம் கோட்பாடு (String Theory)** மற்றும் **கருந்துளை** சார்ந்த ஆய்வுகளுக்காகப் புகழ்பெற்றவர்.
- இவர் முன்னதாக **2001-இல் பத்மஸ்ரீ**, **2012-இல் அடிப்படை இயற்பியல் திருப்புமுனைப் பரிசு**, மற்றும் **2013-இல் பத்ம பூஷண்** விருதுகளைப் பெற்றுள்ளார்.

**Source: Dinamani**



# தமிழக பாட்மின்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு ரூ.1.25 கோடி ஊக்கத் தொகை

## முதல்வர் விஜய் அறிவிப்பு

**சென்னை, அக். 23:** ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக பாட்மின்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு ரூ. 1.25 கோடி ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பாட்மின்டன் விளையாட்டில், பெண்கள் இரட்டையர் எஸ்எல்3-எஸ்யூ5 பிரிவில் தங்கப் பதக்கமும், கலப்பு இரட்டையர் எஸ்எல்3-எஸ்யூ5 பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்ற அந்த அணிகளில் இடம்பெற்றிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு பாராட்டுகள்.

வீராங்கனை துளசிமதி முருகேசனின் சாதனைகளைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.1.25 கோடி உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும்.

பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர், இதுவரை 3 பதக்கங்களை வென்று தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவரது தொடர் வெற்றி, சாதிக்கத் துடிக்கும் இளம் தலைமுறையினருக்கு புதிய நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கிறது.

அவரைப் போன்ற திறமை மிக்க அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குத் தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக நிற்கும் என்று குறிப்பிட்டுள்ளார் முதல்வர் விஜய்.

## 2) Rs. 1.25 Crore Incentive for Tamil Nadu Badminton Player Thulasimathi Murugesan

- Chief Minister Vijay announced a **cash incentive of Rs. 1.25 crore** for Tamil Nadu para-badminton player **Thulasimathi Murugesan**.
- She won a **gold medal in Women's Doubles (SL3-SU5)** and a **silver medal in Mixed Doubles (SL3-SU5)** at the Asian Para Games.

**Source: Dinamani**

## 2) தமிழக பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு ரூ.1.25 கோடி ஊக்கத்தொகை

- ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழகப் பேட்மிண்டன் வீராங்கனை **துளசிமதி முருகேசனுக்கு ரூ.1.25 கோடி ஊக்கத்தொகை** வழங்கப்படும் என **முதல்வர் விஜய்** அறிவித்துள்ளார்.
- இவர் ஆசிய பாரா போட்டிகளில் **பெண்கள் இரட்டையர் (SL3-SU5) பிரிவில் தங்கப் பதக்கமும், கலப்பு இரட்டையர் (SL3-SU5) பிரிவில் வெள்ளிப் பதக்கமும்** வென்றுள்ளார்.

**Source: Dinamani**

# காலமானார்

## ‘செஃப்’ தாமு (72)

**சென்னை, அக். 25:** உணவக மேலாண்மை மற்றும் சமையல் கலைத் தொழில்நுட்பத்தில் முனைவர் பட்டம் பெற்ற தாமோதரன் என்ற ‘செஃப்’ தாமு (72) ஞாயிற்றுக்கிழமை (அக். 25) காலமானார்.



‘செஃப்’ தாமு

இந்தியா முழுவதும் பல்வேறு நட்சத்திர ஹோட்டல்களில் பணியாற்றியுள்ள தாமு, உலகின் பலவகையான உணவுகளைச் சமைத்தவர். 2010-ஆம் ஆண்டில், 24 மணி நேரம் 30 நிமிஷங்கள் 12 விநாடிகளில் தொடர்ச்சியாக 617 விதமான உணவு வகைகளை சமைத்து ‘கின்னஸ்’ உலக சாதனை படைத்தார். 2004-இல் சென்னைப் பல்கலை.யில் ‘உணவக மேலாண்மை மற்றும் சமையல் கலைத் தொழில்நுட்பம்’ பிரிவில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்திய சமையல் கலைஞர் என்ற பெருமை பெற்றவர்.

40 ஆண்டுகால சமையல் கலையில் இவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக, 2025-ஆம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு ‘பத்மஸ்ரீ’ விருது வழங்கியது. செஃப் தாமு, தனியார் தொலைக்காட்சி சமையல் நிகழ்ச்சிகளில் நடுவராக பங்கேற்றுள்ளார். ஓரிரு திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ‘செஃப்’ தாமு ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

3) **Famous Chef Damodharan ('Chef Damu') Passes Away at 72**

- Renowned culinary expert **Damodharan**, popularly known as **'Chef Damu' (72)**, passed away in Chennai on Sunday, October 25 due to ill health.
- He created a **Guinness World Record in 2010** by cooking **617 dishes continuously in 24 hours, 30 minutes, and 12 seconds**.
- Honouring his 40-year contribution to the culinary arts, the Central Government awarded him the **Padma Shri in 2025**.

**Source: Dinamani**

3) **பிரபல சமையல் கலைஞர் 'செஃப்' தாமு (72) காலமானார்**

- பிரபல சமையல் கலை நிபுணர் **தாமோதரன்** என்ற **'செஃப்' தாமு (72)** உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் அக்டோபர் 25 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
- 2010-ஆம் ஆண்டில் **24 மணி நேரம் 30 நிமிடங்கள் 12 வினாடிகளில்** தொடர்ச்சியாக **617 வகையான உணவுகளைச் சமைத்து** 'கின்னஸ்' உலக சாதனை படைத்தார்.
- சமையல் கலையில் 40 ஆண்டுகால சேவையைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு **2025-ஆம் ஆண்டு 'பத்மஸ்ரீ' விருது** வழங்கி கௌரவித்தது.

**Source: Dinamani**

## EXAM BASED MODEL QUESTIONS

1) **குறள் எண்: 136**

**அதிகாரம்: ஒழுக்கம் உடைமை**

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**

**ஏதம் படுபாக் கறிந்து**

**(Thirukural - Statement Question / திருக்குறள் - கூற்று வினா)**

Consider the following statements regarding Thirukural Couplet 136:

1. Persons of strong mind never slip from righteous conduct.
2. They maintain virtue because they strictly fear losing their material wealth.

திருக்குறள் 136-வது குறள் குறித்த பின்வரும் கூற்றுகளைக் ஆராய்க:

1. மனவலிமை உடைய சான்றோர் நல்லொழுக்கத்தில் எப்போதுமே தவற மாட்டார்கள்.
2. தங்களின் செல்வத்தை இழந்துவிடுவோம் என்ற அச்சத்தினாலேயே அவர்கள் ஒழுக்கத்தைப் பேணுகின்றனர்.

Which of the statements given above is/are correct? / மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானது?

A) 1 only
1 மட்டும்

B) 2 only
2 மட்டும்

C) Both 1 and 2
1 மற்றும் 2 ஆகிய இரண்டும்

D) Neither 1 nor 2
இரண்டும் இல்லை

**2) (Assertion & Reason / கூற்று மற்றும் காரணம்)**

**Assertion (A):** The tropical cyclone named 'Arnab' received a name that literally translates to 'ocean'.

**Reason (R):** Bangladesh named Cyclone Arnab from the pre-approved rotating list managed by the World Meteorological Organization (WMO) for the North Indian Ocean region.

**கூற்று (A):** 'அர்னாப்' என்று பெயரிடப்பட்ட சூறாவளிப் புயலின் பெயருக்கு நேரடிப் பொருள் 'பெருங்கடல்' என்பதாகும்.

**காரணம் (R):** வட இந்திய பெருங்கடல் பகுதிக்கு உலக வானிலை அமைப்பு (WMO) பராமரிக்கும் சுழற்சிப் பட்டியலிலிருந்து அர்னாப் என்ற பெயரை வங்காளதேசம் வழங்கியது.

**Codes / குறியீடுகள்:**

A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)
(A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமாகும்.

B) Both (A) and (R) are true but (R) is NOT the correct explanation of (A)
(A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) is true but (R) is false
(A) சரி, ஆனால் (R) தவறு.

D) (A) is false but (R) is true
(A) தவறு, ஆனால் (R) சரி.

**3)** Match List-I with List-II regarding Constitutional Articles:

| List-I (Articles) | List-II (Provisions) |
|---|---|
| a) Article 261 | – 1. Adjudication of disputes relating to waters of inter-State rivers |
| b) Article 262 | – 2. Taxes not to be imposed save by authority of law |
| c) Article 263 | – 3. Public acts, records and judicial proceedings |
| d) Article 265 | – 4. Provisions with respect to an Inter-State Council |

பட்டியல்-I உடன் பட்டியல்-II ஐப் பொருத்துக:

| பட்டியல்-I (சரத்துகள்) | பட்டியல்-II (விதிகள்/கூறுகள்) |
|---|---|
| a) சரத்து 261 | – 1. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுத் தகராறுகளைத் தீர்ப்பது |
| b) சரத்து 262 | – 2. சட்டத்தின் அதிகாரமின்றி வரிகள் விதிக்கப்படக்கூடாது |
| c) சரத்து 263 | – 3. பொதுச் செயல்கள், பதிவுகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் |
| d) சரத்து 265 | – 4. மாநிலங்களுக்கு இடையேயான குழுவை அமைத்தல் |

**Codes / குறியீடுகள்:**

A) a-3, b-1, c-4, d-2

B) a-1, b-3, c-2, d-4

C) a-3, b-4, c-1, d-2

D) a-4, b-1, c-3, d-2

**4) (Correct Pair Identification / சரியான இணையைக் கண்டறிதல்)**

Which of the following pairs regarding recent Government Schemes and Parameters is/are correctly matched?

1. **Samudra Manthan Scheme** - Financial assistance for offshore oil and gas exploration up to FY 2030-31
2. **Deepwater Classification** - Ocean depth ranging between 100 meters and 300 meters
3. **College Campus Tour 2026-27** - Scheme targeting 1,47,631 government school students across 38 districts

சமீபத்திய அரசுத் திட்டங்கள் மற்றும் அளவுகோல்கள் குறித்த பின்வரும் இணைகளில் எது/எவை சரியாகப் பொருந்தி உள்ளது?

1. **சமுத்திர மந்தன் திட்டம்** - 2030-31 நிதி ஆண்டு வரை கடல்சார் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுகளுக்கான நிதியுதவி
2. **ஆழ்கடல் வகைப்பாடு** - கடல் ஆழம் 100 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை உள்ள பகுதிகள்
3. **கல்லூரி களப் பயணம் 2026-27** - 38 மாவட்டங்களில் உள்ள 1,47,631 அரசுப் பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்ட திட்டம்

Select the correct option / சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

A) 1 and 2 only / 1 மற்றும் 2 மட்டும்

B) 1 and 3 only / 1 மற்றும் 3 மட்டும்

C) 2 and 3 only / 2 மற்றும் 3 மட்டும்

D) 1, 2 and 3 / 1, 2 மற்றும் 3

**5) (Statement Question / கூற்று வினா)**

Consider the following statements regarding the Maruthu Pandiyar Brothers:

1. They were the rulers of the Sivaganga kingdom who spearheaded the South Indian Rebellion of 1801 against British colonial rule.
2. The British East India Company executed both Periya Maruthu and Chinna Maruthu at the Tirupputhur Fort on October 24, 1801.

மருது சகோதரர்கள் குறித்த பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. அவர்கள் சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளர்களாக இருந்து ஆங்கிலேயக் கிழக் கிந்திய கம்பெனிக்கு எதிராக 1801-ல் தென்னிந்தியப் புரட்சியைத் தலைமைதாங்கி நடத்தினர்.
2. ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியால் பெரிய மருது மற்றும் சின்ன மருது இருவரும் 1801 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.

Which of the statements given above is/are correct? / மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானது?

A) 1 only / 1 மட்டும்

B) 2 only / 2 மட்டும்

C) Both 1 and 2 / 1 மற்றும் 2 ஆகிய இரண்டும்

D) Neither 1 nor 2 / இரண்டும் இல்லை

**6)** Match List-I (Personalities) with List-II (Achievements / Honours):

| List-I (Personalities) | List-II (Achievements / Honours) |
|---|---|
| a) Ashoke Sen | 1. Asian Para Games Gold Medalist in Women's Doubles Badminton (SL3-SU5) |
| b) Thulasimathi Murugesan | 2. 2010 Guinness Record for cooking 617 dishes continuously in ~24.5 hours |
| c) Chef Damodharan ('Chef Damu') | 3. Awarded annually by Stockholm University and Royal Swedish Academy Nobel Committee |
| d) Oskar Klein Medal | 4. First Indian physicist to receive the prestigious Oskar Klein Medal for String Theory research |

பட்டியல்-I (நபர்கள்) உடன் பட்டியல்-II (சாதனைகள் / கௌரவங்கள்) ஐப் பொருத்துக:

| பட்டியல்-I (நபர்கள்) | பட்டியல்-II (சாதனைகள் / கௌரவங்கள்) |
|---|---|
| a) அசோக் சென் | 1. ஆசிய பாரா போட்டிகளில் பெண்கள் இரட்டையர் பேட்மிண்டனில் தங்கப் பதக்கம் வென்றவர் |
| b) துளசிமதி முருகேசன் | 2. ~24.5 மணி நேரத்தில் 617 வகை உணவுகளைச் சமைத்து 2010-ல் கின்னஸ் சாதனை படைத்தவர் |
| c) செஃப் தாமோதரன் ('செஃப் தாமு') | 3. ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம் மற்றும் ராயல் சுவீடிஷ் அகாதெமி நோபல் குழுவால் வழங்கப்படுவது |
| d) ஆஸ்கர் கிளைன் பதக்கம் | 4. நவீன சரம் கோட்பாட்டு ஆய்வுக்காக உயரிய ஆஸ்கர் கிளைன் பதக்கம் பெற்ற முதல் இந்திய இயற்பியலாளர் |

**Codes / குறியீடுகள்:**

A) a-4, b-1, c-2, d-3

B) a-1, b-4, c-3, d-2

C) a-4, b-2, c-1, d-3

D) a-3, b-1, c-2, d-4

## ANSWER KEY & EXPLANATIONS / விடை மற்றும் விளக்கங்கள்

| S. No | ANSWERS | EXPLANATION |
|---|---|---|
| **1.** | **A** | ➢ Statement 1 is correct. According to Couplet 136, men of strong mind never deviate from decorum/virtue. Statement 2 is incorrect because they avoid slipping from virtue knowing the disgrace/evil (ஏதம்) caused by the lapse of conduct, not due to fear of losing material wealth.<br>➢ கூற்று 1 சரியானது. குறள் 136-ன் படி மனவலிமை உடைய சான்றோர் நல்லொழுக்கத்திலிருந்து எப்போதுமே தவற மாட்டார்கள். கூற்று 2 தவறானது, ஏனெனில் ஒழுக்கம் தவறுதலால் குற்றம் மற்றும் இழிவு உண்டாவதை நன்கு உணர்ந்துள்ளதாலேயே அவர்கள் தவற மாட்டார்களே தவிர, செல்வ இழப்பு அச்சத்தினால் அல்ல. |
| **2.** | **B** | ➢ Both statements are individually correct. In Bengali, 'Arnab' means ocean. Bangladesh suggested the name from the WMO pre-approved list for the North Indian Ocean. However, statement (R) explains the procedure of naming, not why the Bengali word 'Arnab' means ocean.<br>➢ கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் உண்மை. வங்காள மொழியில் 'அர்னாப்' என்றால் பெருங்கடல் என்று பொருள். வட இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு WMO பராமரிக்கும் சுழற்சிப் பட்டியலிலிருந்து வங்காளதேசம் இப்பெயரை வழங்கியது. எனினும், R என்பது பெயர் வைக்கப்பட்ட நடைமுறையைக் கூறுகிறதே தவிர, அர்னாப் என்ற சொல்லுக்கு ஏன் பெருங்கடல் எனப் பொருள் வந்தது என்பதற்கான விளக்கமல்ல. |

| | | |
|---|---|---|
| **3.** | **A** | ➢ Article 261 deals with Public acts, records and judicial proceedings (3). Article 262 deals with Adjudication of inter-State river water disputes (1). Article 263 provides for Inter-State Council (4). Article 265 lays down that taxes cannot be imposed save by authority of law (2).<br>➢ சரத்து 261 - பொதுச் செயல்கள், பதிவுகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் (3). சரத்து 262 - மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறுகளைத் தீர்ப்பது (1). சரத்து 263 - மாநிலங்களுக்கு இடையேயான குழு (4). சரத்து 265 - சட்டத்தின் அதிகாரமின்றி வரிகள் விதிக்கப்படக்கூடாது (2). |
| **4.** | **B** | ➢ Pair 1 is correct (Samudra Manthan is implemented till FY 2030-31 with Rs. 84,084 crore outlay). Pair 3 is correct (College Campus Tour scheme targets 1,47,631 government school students needing special attention across 38 districts visiting 741 colleges). Pair 2 is incorrect because deepwater is classified as depth above 400 meters (and ultra-deepwater above 1,500 meters).<br>➢ இணை 1 சரி (சமுத்திர மந்தன் திட்டம் 2030-31 வரை ரூ.84,084 கோடியில் செயல்படுத்தப்படுகிறது). இணை 3 சரி (கல்லூரி களப் பயணம் திட்டம் 38 மாவட்டங்களில் உள்ள 1,47,631 அரசுப் பள்ளி மாணவர்களை 741 கல்லூரிகளுக்கு அழைத்துச் செல்வதை இலக்காகக் கொண்டது). இணை 2 தவறு, ஏனெனில் கடல் ஆழம் 400 மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகளே ஆழ்கடல் என்றும், 1,500 மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகள் மிகுந்த ஆழ்கடல் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. |
| **5.** | **C** | ➢ Both statements are correct. Periya Maruthu and Chinna Maruthu led the anti-colonial resistance in 1801 and were executed by the British at Tirupputhur Fort on October 24, 1801.<br>➢ இரண்டு கூற்றுகளும் சரியானவை. பெரிய மருது மற்றும் சின்ன மருது ஆகிய மருது சகோதரர்கள் 1801 தென்னிந்தியப் புரட்சியை சிவகங்கையிலிருந்து தலைமைதாங்கி நடத்தினர். அவர்கள் 1801 அக்டோபர் 24 அன்று ஆங்கிலேயரால் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். |
| **6.** | **A** | ➢ Ashoke Sen is the first Indian physicist awarded the Oskar Klein Medal for String Theory (4). Thulasimathi Murugesan won Gold in Asian Para Games Women's Doubles SL3-SU5 (1). Chef Damu set a Guinness record in 2010 cooking 617 dishes in 24h 30m 12s (2). The Oskar Klein Medal is awarded by Stockholm University & Nobel Committee (3).<br>➢ அசோக் சென் - சரம் கோட்பாட்டு ஆய்வுக்காக ஆஸ்கர் கிளைன் பதக்கம் பெற்ற முதல் இந்திய இயற்பியலாளர் (4). துளசிமதி முருகேசன் - ஆசிய பாரா போட்டிகளில் பெண்கள் இரட்டையர் பேட்மிண்டனில் தங்கப் பதக்கம் வென்றவர் (1). செஃப் தாமு - 2010-ல் 617 உணவுகளைச் சமைத்து கின்னஸ் சாதனை படைத்தவர் (2). ஆஸ்கர் கிளைன் பதக்கம் - ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம் & நோபல் குழுவால் அளிக்கப்படும் விருது (3). |

**MOTIVATION OF THE DAY:**

